**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No. 102/2013

Deposition Of Witness for

Prosecution PW 4
Defense
Court

Name அருள்ராஜ்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of January 2020.

நான் தற்போது சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.03.2012 அன்று நான் வட்டார தடய அறிவியல் ஆய்வகம் திருநெல்வேலியில் அறிவியல் அலுவலராக பணியிலிருக்கும்போது காவலர் 1203 திரு.நடராஜன் மூலமாக இந்நீதிமன்றத்திலிருந்து கடித எண். டி776/2012 நாள் 02.03.2012 என்று குறிப்பிட்ட நீதிமன்ற கடிதத்துடன் சரியாகவும், முழுமையாகவும் நீதிமன்ற முத்திரையிடப்பட்ட காகித பொட்டலம் ஒன்று பகுப்பாய்விற்கு பெறப்பட்டது. அந்த காகித பொட்டலத்தின் மேல் மூன்றடைப்பு காவல்நிலைய குற்ற எண்.157/2011 பி.ஆர்.65/2012 எதிரி பழனி என்று எழுதப்பட்டிருந்தது. அந்த காகித பொட்டலத்தினுள் உலர்ந்த நிலையில் பசுமை கலந்த பழுப்பு நிறம் உள்ள சிறு இலைகளுடன் கூடிய கதிர்கள், விதைகள் மற்றும் நொறுங்கிய இலைகளுடன் கூடிய மாதிரியின் எடை 25 கிராம் இருந்தது. அந்த மாதிரியை பகுப்பாய்வு செய்ததில் அதில் கெனபினாய்டுகள் இருப்பது கண்டறியப்பட்டு அந்த மாதிரி கஞ்சா என அறிக்கை செய்யப்பட்டது. அறிக்கையுடன் ஆய்வு போக மீதமுள்ள மாதிரி எங்களது அலுவலக முத்திரையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. நான் வழங்கிய பகுப்பாய்வு அறிக்கை என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.6. மாண்புமிகு நீதிமன்ற கடித எண். டி776/2012 நாள் 02.03.2012 ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று சொன்னதால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.